www.tamilarangam.net

விலை ரூபா 10.00

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

மார்கழி 2000 இதழ்-21

"நாங்க என்ன சமாதானத்துக்கு நாட்டமில்லாமலா இருக்குறம். இவையதானே சமாதானம், சமாதானமென்டு பேக்காட்டிக் கொண்டு எங்கள ஆட்லரியால அடிச்சு சிதைக்கினம். இந்தமுறையும் ஆளுக்கொரு கதையத்தானே கதைக்கிறாங்கள்"

-சனத்தின் குரல்-

# இறுதி இலக்குநோக்கி வெற்றிகரமாக...



ஆட்சித்திறன் இழந்து, அந்நிய சக்திகளிடம் மன்றாடி நிற்கும் சிறிலங்கா அரசு, தன்னை தப்ப வைக்கும் இறுதி முயற்சியினை சென்ற வருடம் மேற்கொண்டது. நோர்வேயை அனுசரணையாளாராக் கொண்டு விடுதலைப் புலிகளை அரசியல் பேச்சுக்களுக்கு அழைத்து, 1994 இனைப்போன்று ஒரு இராஜதந்திரப் பொறிக்குள் சிக்க வைக்கலாம் என அது திட்டமிட்டது. இதன் மூலம், சர்வதேச ஆதிக்க சக்திகளின் பக்க பலத்துடன் மீண்டும் ஒரு தடவை நம் தேசத்தின் மீது பாரிய யுத்தத்தை கட்டவிழ்த்து விடலாம் எனவும் கருதிச்செயற்பட்டது. ஈற்றில் சிறிலங்கா அரசானது தன்னால் பின்னப்பட்ட பொறிக்குள் தானே சிக்கிக்கொள்ள வேண்டியேற்பட்டது. கடந்த ஒருவருடம் அவர்களின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு பாரிய சவாலாக அமைந்தது.

வழமைபோல, யுத்த முனை கொந்தளித்துக் கொண்டிருக்கின்றது. புதிய சிங்கள பாராளுமன்றமும் அதன் செயற்பாடுகளும் ஆடிக்கொண்டிருக்கும் அழுகிய பல் என அவர்களே கிண்டல் செய்யும் அளவிற்குத் தட்டுத்தடுமாறிக் கொண்டிருக்கின்றது. நிதியும் பொருளாதாரமும் வங்குரோத்து நிலையில். சிங்கள தேசத்தின் அரசுத் தலைவியோ வாரக்கணக்கில் வெளிநாட்டில் தங்கி நிற்கின்றார். அரசியல் மற்றும் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த நியமனங்களை தொலைபேசி மூலம் செய்து கொண்டிருக்கின்றார். நோர்வே பிரதிநிதி தெரிவித்த விடயங்களை சந்திரிகா தவறாக புரிந்து கொண்டுள்ளார் என கதிர்காமர் அசடுவழியும் அளவிற்கு சிறிலங்கா அரசுத்தலைவியின் நிலை தடுமாற்றமுற்றதாய் உள்ளது. வெகுவிரைவில் உடைந்து சுக்குநூறாகப் போவதற்கு விதிக்கப்பட்டுள்ள சிறிலங்கா அரசினை பாதுகாப்பதற்கு இறுதிக்கட்டத்தில் நேரடியாகவே இந்திய அரசு மற்றும் ஏகாதிபத்திய சக்திகள் அதனதன் பண்புகளுடன்அரங்கிற்கு வந்துவிட்டன.

(தொடர்ச்சி 2ஆம்பக்கம்)

# ஜனதா விமுக்தி பெரமுன : புத்துயிர்ப்படையும் இனவெறி



ஆயிரம் வெளிப்படையான எதிரிகளை விட, ஒரு துரோகியினால்தான் மக்களுக்கு ஆபத்துக்கள் அதிகம். இடதுசாரிக்கட்சி எனக்கூறிக்கொள்ளும் மக்கள் விடுதலை முன்னணி- ஜனதா விமுக்தி பெரமுன - தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை என்ற அரசியல் அம்சத்தை, நாட்டை துண்டாடல் என்பதாக அர்த்தப்படுத்தி சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்கின்றது. இதன் மூலம் இக்கட்சி சிங்கள மக்களை சோவினிசத்தின் பிடிக்குள் மேலும் தள்ளி நிரந்தரமாகவே அவர்களை சிங்கள பௌத்த ஆதிக்கத்தின் அடிமைநிலையில் வைக்கவே செயற்படுகின்றது. மீளவும் தமிழரின் தன்னாட்சி முறைக்கு எதிரான தனது தொடர் போராட்டத்தை இக்கட்சி ஆரம்பித்துள்ளது. தனது இனவெறிச்சாரத்தை குறைத்துக்காட்டுவதற்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு, நீர்வளத்தை தனியாருக்கு விற்பதற்கு எதிர்ப்பு போன்ற கோசங்களையும் இணைத்துக்கொண்டதில் வியப்பில்லை.

அனைத்து மக்களுக்கும் சமத்துவம். இதன் மூலமே இனப்பிரச்சனைக்கு தீர்வு எனக்கூறும் இக்கட்சி, எப்போதாவது, சிங்கள அரசு யந்திரம், சிங்கள தேசியகொடி, தேசியகீதம், சிங்கள மொழி மட்டும் ஆட்சிமொழி, பௌத்தமதம் ஆட்சி மதம் என்பவற்றையெல்லாம் அகற்ற வேண்டும் எனக்

(தொடர்ச்சி 7ஆம்பக்கம்)

# ஏகாதிபத்திய அச்சுறுத்தல்!

எமது போராட்டத்தை நசுக்குவதற்காக சிங்கள அரசுடன் கூட்டணி அமைத்திருக்கும் அமெரிக்க, பிரித்தானிய ஏகாதிபத்திய சக்திகளின் ஆக்கிரமிப்பு அரசியலின் திரட்டப்பட்ட சாரமாக பிரிடிஷ் துணை வெளியுறவு அமைச்சரின் அண்மைய கூற்றுகள் அமைந்துள்ளன:

"விடுதலைப் புலிகள் தனியரசு அமைப்பதற்காகத்தான் போராடுகிறார்கள். தமிழ் மக்களும் புலிகளின் இந்த நோக்கத்திற்கு ஆதரவாக இருக்கிறார்கள். ஆனால் நாம் மக்களின் இந்த சிந்தனையை எமது கருத்துக்களால் மாற்ற வேண்டும்... பிரிவினை என்பதுடன் நாம் உடன்படவில்லை. அயர்லாந்தில் ஏற்படுத்திய தீர்வையொத்த தீர்வை சிறிலங்காவில் ஏற்படுத்த வேண்டும்" என்பதாகும்.

மேற்படிக் கூற்றை பரிசீலிப்போமானால், விடுதலைப் புலிகளை நமது மக்களிடமிருந்து தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், தமிழீழம் அமைவதை தாம் ஒருபோதும் ஆதரிக்கப் போவதில்லை, எனவே தாம் ஆதரிக்கும் ஒரு தீர்வை புலிகள் அமைப்பும் மக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் அவர்களின் ஏக நிலைப்பாடு. இதற்கு நமது தேசம் பணிந்து போகவேண்டுமென எதிர்பார்க்கிறார்கள்.

இது மாத்திரமல்ல, அடுத்த வருடம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு பிரிட்டனில் தடைசெய்யப்படும் என சிறிலங்கா அரசுக்கு உறுதியளிக்கப்பட்டு முள்ளது.

பிரிட்டனில் விடுதலைப் புலிகள் தடைசெய்யப்படுவது என்பது, பிரிட்டனின் கீழ் இயங்கும் ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள (E.U) அனைத்து நாடுகளிலும் விடுதலைப் புலிகளினதும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினதும் செயற்பாடுகளுக்கு தடைவிதிக்கப்பட்டதாக அமையும். தமிழீழ விடுதலைப் புலிகளை தடைசெய்வது என்பது, இன்றைய நிலையில் ஒட்டுமொத்த போராட்டத்தை தடைசெய்வதாகின்றது. நாம் ஒரு தேசம் என்பதை அங்கீகரிக்க மறுப்பதாகின்றது. எமது போராட்டத்தை பயங்கரவாதமாக முத்திரை குத்தி எமது தேசிய இருப்பை சிதைப்பதற்கு அவர்கள் தயாராகிவிட்டதைக் காட்டுகின்றது.

ஏகாதிபத்திய சக்திகளின் அடக்குமுறை சூழ்ச்சிகளை முறியடித்திட இந்த பேச்சுவார்த்தை மேடையை எமது தேசத்தின் இருப்பை அங்கீகரிப்பதற்கான பிரதான மேடையாக நாம் மாற்றுவோம். எமது போராட்டத்தை பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்தது போல் உலக சமூகம் அங்கீகரிக்குமாறு செய்வோம்.இதுவே நாம் அடையப் போகும் அரசியல், இராணுவ வெற்றிகளை நீண்ட காலத்தில் பாதுகாப்பதற்கான சர்வதேச அளவிலான அரசியல் காப்பாகும்.

**எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்**

www.tamilarangam.net

# எச்சரிக்கையுடன் எதிர்கொள்வோம்...

அமெரிக்கர்கள், பிரித்தானியர் மற்றும் ஐரோப்பிய யூனியனை சேர்ந்தவர்கள், நோர்வேஜியர், இந்தியர்கள் என பலரும் நமது தேசியப் பிரச்சனையை தீர்ப்பது குறித்து தீவிரமாக விவாதித்துக் கொண்டிருக்கின்றனர். சிறிலங்கா அரசினை இதுவரை காலமும் இராணுவ மற்றும் பொருளாதார அர்த்தத்தில் பாதுகாத்தும் பலப்படுத்தியும் வந்த ஆதிக்க சக்திகளான இவர்கள் தற்போது அரசியல் அர்த்தத்திலும் தமது விசுவாசியை பாதுகாத்து அதன் இருப்பை அப்படியே தொடர வைப்பதில் தீவிர பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றனர்.

நமது தேசியப்பிரச்சனை குறித்து மிக மும்முரமாக ஆராய்ந்து கொண்டிருக்கும் இந்த சக்திகள் ஏற்கனவே நமது விடுதலைப் போராட்டதின் இலக்குகள் மீது தமது நிபந்தனைகள் இட்டுள்ளன. தனியரசு அமைய முடியாதென்றும், அப்படி தன்னிச்சையாக அமைத்தால் அதனை தம்மை அங்கீகரிக்க மாட்டார்கள் என்றும், சிறிலங்கா அரசின் இறைமையை பங்கப்படுத்தி விடக்கூடாதென்றும், பிரதேச ஒருமைப்பாடு பாதிப்புறக்கூடாதெனவும், எந்தவிதத்திலும் அதற்கு அனுமதிக்க மாட்டோம் எனவும், விடுதலைப்புலிகள் மீது அழுத்தங்கள் கொடுத்துள்ளன. இப்படியெல்லாம் முற்கூட்டியே முன்னிபந்தனைகளை வைத்து விட்டு இப்போது இந்த அந்நிய சக்திகள் முன்னிபந்தனைகளற்ற அரசியல் பேச்சுக்களுக்கு நடுநிலைப் பாத்திரம் வகிக்கப் போவதான தோற்றப்பாட்டைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

இதற்கும் மேலாக, பயங்கரவாதத்தை கைவிடுமாறு இந்த சக்திகள் விடுதலைப்புலிகளை கோருகின்றன. தேசியவிடுதலைப் போராட்டம் ஆயுத வடிவம் பெறுவதற்கு மூல காரணமாக அமைந்த அரச பயங்கரவாதத்தை கைவிடுமாறு சிறிலங்கா அரசுக்கு இச்சக்திகள் அழுத்தம் கொடுக்கத்தயாராக இல்லை. மாறாக, மனித உரிமை விடயங்களில் அரசு தரப்பில் முன்னேற்றம் இருப்பதாக அறிக்கைகளை விட்டுக்கொண்டிருக்கின்றன. உண்மையில், இத்தகைய சிறிலங்கா அரசபயங்கரவாதத்-



தின் சூத்திரதாரிகளே இந்த ஏகாதிபத்திய சக்திகள் தான். தொடர்ச்சியாகவே சிறிலங்கா அரசபயங்கரவாதத்தை இவை போற்றிப் போசித்து வந்துள்ளன. தமிழ் மக்களை மட்டுமன்றி சொந்த சிங்கள மக்கள் மீதே அரசபயங்கரவாதத்தை பிரயோகித்து சிறிலங்கா அரசானது, ஏகாதிபத்திய மற்றும் பிராந்திய ஆதிக்க நலன்களுக்கு சேவை செய்வதை இந்த அந்நிய சக்திகள் ஊக்குவித்து வந்துள்ளன. சிறிலங்கா அரசை முழுவதுமாக கைக்குள் போட்டுக் கொண்டு தொடர்ச்சியாக இத்தீவிலுள்ள இயற்கை மூல வளங்களையும், மனித உழைப்புகளையும் சுரண்டிக்கொழுத்து வந்துள்ளன. இன்னும் அதிகமதிகமான வாய்ப்புகளை அனுபவிக்கவே பேராசை கொண்டு காத்துக்கொண்டிருக்கின்றன. தென்கிழக்காசிய நாடுகளை கசக்கிப்பிழிந்து விட்டு இப்போது தென்னாசிய பிராந்தியதில் திடமாகக் கால்பதித்து விடுவதில் குறியாக இருக்கின்றன.

உடனடிப்பிரச்சனையில் நமது தேசத்திற்கு ஆதரவாக செயற்படுவது போலவும், அதனை கடுமையாக சிங்கள சோவினிசம் எதிர்த்து நிற்பது போலவும், அதையெல்லாம் மீறி நமது தேசத்திற்கு "நல்லது" செய்ய முயல்வது போலவும் நம்மை நம்பச்சொல்கின்றன.

ஒவ்வொரு வருடமும் இந்த சிங்கள அரசபயங்கரவாதத்தை பலப்படுத்தி விஸ்தரிப்பதற்கு கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான போர்த்தளபாடங்களையும் வதைக்கருவிகளையும் பயிற்சி முறைகளையும் விலைக்கும் இலவசமாயும் இதேசக்திகள் சிறிலங்கா அரசிற்கு வழங்கி வந்துள்ளன. வருகின்றன. ஒவ்வொன்றாக பட்டியலிடுவோம் எனின் இச்சக்திகளின் உண்மைச் சொரூபம் வெட்ட வெளிச்சமாகும்.

இத்தீவினை காலாதி காலத்திற்குமாக தமது பொருளாதார அடிமைத்தளைக்குள் வைத்துக்கொள்வது, நிதி மூலதனத்தின் நுகத்தடியில் பூட்டி நம்மை ஓட்டாண்டியாக்குவது, மக்களுக்கு சொந்தமான இயற்கை வளங்களை கொள்ளையிடுவது, உழைப்புச்சக்திகயை கசக்கிப்பிழிவது. மண்ணையும் மக்களையும் ஏகாதிபத்தியத்தின் சந்தைக்களமாக்குவது போன்ற நடவடிக்கைகளை மேலும் விரிவாக்குவதற்கு நமது தேசிய விடுதலைப்போராட்டம் குறுக்கே நிற்கின்றதே என்பதுதான் இச்சக்திகளின் தீவிர கவலையாகும்.

இப்போது இந்த சக்திகளின் விசனம் எல்லாம், ஏகாதிபத்திய மற்றும் நவகொலனித்து சுரண்டலை விரிவுபடுத்த தாம் சிறிலங்கா அரசுக்கு கொட்டிக் கொடுக்-

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## இறுதி இலக்கு...

1ஆம் பக்க தொடர்ச்சி

நமது தேசத்தின் தரப்பில், கடந்த ஒருவருடமாக மக்களின் பலத்தில் விடுதலைப்புலிகள் பெற்ற பரந்த இராணுவ வெற்றிகளும் மண் மீட்புகளும், அதன் காரணமாக திடநம்பிக்கை பெற்ற நமது தேசம் தனக்குள் பெற்றுவரும் ஒருமித்த தன்மையும் திரட்சியும் இன்று நமது தேசியவிடுதலைப் போராட்டத்தை என்றுமில்லாத அளவிற்கு ஒரு அரசியல் பலத்துடன் நிலை நிறுத்தியுள்ளது. இந்த சூழலில், சர்வதேச சக்திகள் பலவற்றின் அனுசரனையில் நமது தேசம் ஒரு அரசியல் பேச்சுவார்த்தை அரங்குக்கு அழைக்கப்பட்டுள்ளது. சமாதானப் பேச்சுக்களினுடாக தேசியப்பிரச்சனையை தீர்க்க விரும்புவதாக கூறிக்கொள்ளும்சிறிலங்கா அரசின் தலைமையிலுள்ள முக்கிய நபர்கள் முன்னுக்கு பின் முரணாக கருத்து வெளியிட்டுக்கொண்டிருப்பது ஒரு புறமும், அதிதீவிர சோவினிச சக்திகள் அரசியல் சமத்துவத்திற்கு எதிராக வரிந்து கட்டிக்கொண்டு நிற்கும் நிலைமைகளும் நமது தேசியப் பிரச்சனையின் நியாயத்தன்மையை மேலும் மேலும் நிரூபித்து வருகின்றது. ஆக, நமது தேசத்தின் இலட்சியப்பயணம் தொடர்ச்சியை பேணுவதற்கும் ஈற்றில் வெற்றிபெறுதற்கும் ஏதுவாகவே நிலைமைகள் உள்ளன.

அண்மைக்காலமாக விடுதலைப்புலிகள் பெற்ற இராணுவ வெற்றிகளானது நீண்ட காலமாக எதிர்பார்த்து வந்த அரசியல் பலத்தினை, நம் தேசத்திற்கு பெற்றுத்தந்துள்ளது. வரவிருக்கும் நாட்களில், நாம் அரசியல் அரங்கில் அரசியல் பேச்சவார்த்தை செயற்பாடுகளினுடாக காத்திரமான வெற்றிகளை பெறுவோம். இவ்வெற்றிகளை, தமிழீழம் என்ற நமது இலட்சியத்தை அடைவதற்கான ஒட்டுமொத்த இராணுவ மற்றும் மக்கள் வலிமையை உருவாக்குவதற்கான அடித்தளத்தை உருவாக்குவாக்குதவற்கு பயன்படுத்திக் கொள்வோம். கெரில்லா போராட்ட நிலையில் இருந்து மரபு வழி போர்முறைக்கு வளர்ந்து சிறிலங்கா எதிரிகளை துவம்சம் செய்து வரும் நமது தேசியவிடுதலைப் போராட்டமானது, அடுத்த கட்டமாக, மக்கள் யுத்தமாக மலர வேண்டிய கட்டத்திற்கு வந்து விட்டது. காரணம் இப்போது நமக்கு எதிரி சிறிலங்கா அரசு மட்டுமல்ல, நமது இறைமையை அவர்களது இறைமைக்குள் சிறைப்படுத்த முயலும், காலாதி காலத்திற்கும் எமது தேசத்தை அடிமைப்படுத்த முனையும் ஏகாதிபத்திய ஆதிக்க சக்திகளும் பிராந்திய ஆதிக்க சக்திகளுமாக எதிரிகள் பன்மைத்தன்மை பெறுகின்றனர்.

ஒருபுறம் அரசியல் பேச்சுக்களை வெற்றிகரமாக எதிர்கொள்வோம். மறுபுறம் இதுவரை பெற்றுக்கொண்ட அரசியல் மற்றும் இராணுவ வெற்றிகளை திடப்படுத்திக்கொண்டு அனைத்து தேசிய சக்திகளும் மக்களும் கூட்டிணைந்து, அடுத்தடுத்த தேசியக்கடமைகளை உள்ளும் புறமும் ஆற்றத்தயாராவோம். ஒரே தேசமாக ஒரே மூச்சாக நம் எதிர்காலம் மற்றும் இறுதி இலட்சியத்திற்கான அத்திவாரங்களைஇடுவோம். அதனை இடைவிடாது பலப்படுத்துவோம். அந்த உறுதியான அத்திவாரத்தின் மீது நமக்குரிய உன்னத ஆட்சிமுறைகளை கட்டியெழுப்புவோம். ஆக, அரசியல் பேச்சு வார்த்தைகளையும் கூட நமது தேசத்தின் இறுதி வெற்றிக்கும் இலட்சியத்திற்குமான அசைக்க முடியா அத்திவாரமாக்குவோம்! கடினமான கரடுமுரணான பயணத்தின் பின் ஒரு இனிமையான எதிர்காலம் முரசம் கொட்டிக்கொண்டிருக்கின்றதை நம்மால் கேட்க முடிகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமாதானம் என்றால் சமாதானம்...? போர் என்றால் போர்!!!

வரலாறு மீண்டும், மீண்டும் படைக்கப்படுகிறது. வரலாற்றில் விடுதலைப் போராட்டங்களை அடக்கியொடுக்க நினைத்த ஆதிக்க அரசுகளுக்கேற்பட்ட படிப்பினைகளை அனுபவங்களாகக் கொள்ள மறுக்கும் சிங்கள அரசுக்கும் அதன் இந்திய, ஏகாதிபத்திய கூட்டாளிகளுக்கும் 21ஆம் நூற்றாண்டிலல்ல, மனித வரலாறு முழுவதிலுமே விடுதலைப் போராட்டங்களையும், மக்கள் எழுச்சிகளையும் அடக்கி ஒடுக்க முடியாது என்பதற்கு எமது போராட்டம் மிகச் சிறந்த உதாரணமாகத் திகழ்கின்றது.

இன்று சமாதானம், சமாதானம் என்று ஏமாற்றி வருகின்ற சிங்கள இனவாதத்திற்கோ, சர்வதேச நாடுகளுக்கோ வேண்டுமானால் தமிழர்கள் பிரச்சினையில் அரசியல் பேச்சுவார்த்தைகள் என்பது புதிதான விடயமாக இருக்கலாம். நமது தேசத்தைப் பொறுத்தவரையில் இந்த சமாதானம் என்ற போர்வையில் பல தடவைகள் ஏமாற்றப்பட்டுள்ளோம். பேரழிவுகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம். பிரித்தானியாவின் வெளியேற்றத்தின் போதும், அதன் பின்னரும் சமாதானத்துடனும், சமத்துவத்துடனும் தனித்துவத்துடனும் ஒரு நாட்டின் பிரஜைகளாக இருக்கவே நாம் விரும்பினோம். பிரித்தானியா வெளியேறும் தருவாயில் சிங்களவர்கள் அல்லாத மக்கள் பிரிவினர்களின் தனித்துவத்தையும் அரசியல் உரிமைகளையும் பாதுகாக்கும் அரசியல் ஏற்பாடுகளை முழுமையான அளவில் உறுதிப்படுத்தாத போதிலும் கூட, நாம் தனித்துவத்துடன் சமத்துவமாக வாழலாம் என்கின்ற ஒரே நம்பிக்கையின் காரணமாகவே ஒன்றுபட்ட ஆட்சி முறைமைக்கு சம்மதித்தோம்.

நியாயமான இந்த விட்டுக்கொடுப்புகள், இணக்கங்களையெல்லாம் சிங்கள இனவாதம் எமது பலவீனமாகவே எடுத்துக் கொண்டது. அடக்குமுறைகள் தொடர்ந்தது. அமைதி வழியில் எதிர்த்துப் போராடினோம். எமக்கான அரசியல் உரிமைகளைப் பாதுகாப்பதாக கூறி அதற்கான சட்ட அமுலாக்கலுக்கான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இருந்தும், அனைத்து ஒப்பந்தங்களுக்கெதிராகவும் சிங்களப் பேரினவாதம் தனது கோரமுகத்தைக் காட்டியது. எனவே தொடர்ந்தும், எமது உரிமைக்காக நீதியான, நியாயமான போராட்டங்களை நடாத்தினோம். இதனைத் திட்டமிட்ட முறையில் அழித்தொழிப்பதற்கு சிங்கள அரசு இராணுவ அடக்குமுறையைத் தேர்ந்தெடுத்தது. இனஅழிப்பு யுத்தத்தை நம் தேசத்தின்மீது திணித்தது. இதனை எதிர்த்து ஆயுதமேந்திய தற்காப்பு போராட்டத்தில் ஈடுபட்டோம். இங்கும் எம்மைப் பலவீனமாக நினைத்தே அடக்கியொடுக்கிவிடலாம் என சிங்கள அரசு கடுமையான இராணுவ வழிமுறையை புதிய புதிய வடிவங்களில் கட்டவிழ்த்து விட்டது. ஆதிக்க சக்திகளின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொண்டது. உலகெங்கும் எம்மக்களை சிதறடித்து அரசியல் அநாதைகளாக்கியது. எஞ்சியிருந்தவர்களை இனஅழிப்புக்குள்ளாக்கி விட வரிந்து கட்டிச்செயற்பட்டது.

சொல்லொணாத் துயரங்களையும், இன்னல்களையும் சுமந்து எமது மக்கள் தேசமாக இக்கொடிய இனவெறிப் போரை எதிர்கொண்டார்கள். மீண்டும், மீண்டும் எரிவுகளுக்கிடையிலும் சாம்பல்களுக்கிடையிலும் எழுந்து நின்றது எமது தேசம்.

ஈழத்தமிழர்களைக் காப்போம் என்னும் போர்வையில் தனது ஆதிக்க நலன்களுடன் எமது விடுதலைப் போரை நசுக்க முற்பட்ட இந்திய அரசினால் நம் தேசம் அனுபவித்தவையும், கற்றுக் கொண்டவையும் ஏராளம். உலகில் நான்காவது பெரிய இராணுவத்தின் ஆக்கிரமிப்பு நமது மக்களதும் தமிழக மக்களதும் பலத்தில் விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டது.

இப்போரில் நம் தேசம் பலவீனப்பட்டு நிற்பதாக கருதி, இச்சந்தர்ப்பம் பார்த்து சிங்கள அரசு மீண்டும் போரை ஆரம்பித்தது. நம்பி ஏமாற்றப்பட்ட மூர்க்கத்தனத்துடன் போரிட்டு களைத்து நின்ற எம்மை ஒரே அடியாக ஒழிப்பதற்கு நிதியொதுக்கீட்டில் பெரும் நிதியை ஒதுக்கி கொடிய போரை ஆரம்பித்தது சிங்கள அரசு. எதிர்கொண்டார்கள் விடுதலைப் புலிகள். வீழ்வோமாயினும் வெல்வோம் என்பதாக துணிச்சலுடனும், உறுதியுடனும் மக்களும், புலிகளுமாக தேசம் வீறுகொண்டெழுந்தது. சிறிலங்கா அரசின் இனவொழிப்புப் போரை மக்களின் பலத்திலும் ஆதரவிலுமாக எதிர்கொண்டார்கள் விடுதலைப் புலிகள்.

இந்த வெற்றிகளையும் முன்னேற்றத்தையும், கருக்கொண்டு வந்த புதிய தேசிய அரசின் தளிர்களையும், சகிக்க முடியாத நிலையில், நம்தேசத்தின் வெற்றியை திசைதிருப்ப, மீளவும் தமது சிங்கள ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் இரகசிய நிகழ்ச்சிநிரலுடன் புதிய தீவுத் திட்டங்களுடனும் புதிய சிங்கள தலைமை அரங்கிற்கு வந்தது. இரகசிய நிகழ்ச்சிநிரலைத் தயாரித்தது. "சமாதானப் பேச்சுவார்த்தை" என்று கூறிக்கொண்டு தம்மைப் பலப்படுத்துவதற்காகவும், சர்வதேசத்தில் தாம் சமாதானப் பிரியர்கள் எனக் காட்டுவதற்காகவும் பேச்சுவார்த்தை என்றது. பேச்சுவார்த்தைகள் எல்லாமே ஏமாற்று நாடகங்களாக நடந்தேறின. மீண்டும், மீண்டும் எமது தேசம் நமக்கான ஒரே தீர்வு தனியரசே என்பதில் உறுதி பெற்றுக் கொண்டது. மகத்தான உன்னத தியாகங்களுடன், துணிச்சலுடனும் அர்ப்பணிப்புடனும் தொடர்ச்சியாக தேசவிடுதலைப் போரை நடாத்திவரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையில் தமிழ்த்தேசிய இயக்கம் மேலும் மேலும் பலம் பெற்றது.

தொடர்ச்சியான யுத்தத்திற்கு மத்தியிலும், சர்வதேச ஆதிக்க சக்திகளின் அழுத்தங்களுடன், போரினால் ஏற்பட்ட அழிவுகளால் மிகவும் பாதிக்கப்பட்டு இருந்த தமிழ்த்தேசத்தினால் பல தடவைகள் சமாதான வாய்ப்புக்கள் சிங்கள தேசத்திற்குத் தரப்பட்டது. இருந்தும் சந்திரிகா தலைமையிலான சிறிலங்கா அரசு தனது போர்வெறியை முன்னெப்போதையும் விட உக்கிரமாக்கியது. சமாதானத்திற்கு சம்பந்தம் இல்லாதவாறு எம்மக்கள் மீது மோசமான பொருளாதாரத் தடையை விதித்து நமது மக்களை, மக்களின் ஆன்மாவைச் சிதைத்தது. பாரிய இராணுவ நடவடிக்கைகள் மூலம் எமது மண்ணை ஆக்கிரமித்த சிங்கள அரசு விடுதலைப்புலிகள் அமைப்பை முற்றிலுமாக அழித்தொழித்துவிடலாம் என கனவு கண்டது. மீளவும் சிங்கள அரசு பரிதாபகரமாகத் தோற்றுத் தலைகவிழ்ந்தது. நமது விடுதலைப் போராட்டமானது புதிய உத்வேகத்துடனும் ஒரு புதிய பண்புடனும் புத்தெழுச்சியுற்று சர்வதேச அங்கீகாரத்தைப் பெறத்தொடங்கியுள்ளது. நம் தமிழ்த்தேசிய இயக்கம் போராட்ட வரலாற்றில் திரட்சியுற்றுப் பலம்பெற்று தலைநிமிர்ந்து நிற்கின்றது.

ஓயாத அலைகள் போர் நடவடிக்கைகள் (I,II,III) மூலம் வன்னிப் பெருநிலப் பரப்பை ஆக்கிரமிப்பு இராணுவத்திடமிருந்து விடுவிப்புச் செய்ததுடன் முதன் முறையாக தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இராணுவ சமபல நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் பலமானார்கள். எமது தேசத்தின் உயரிய இலட்சியமான தமிழீழம் திடமாகச் சாத்தியமாகும் என மக்கள் உணர்ந்தார்கள். தேசவிடுதலைப் போரில் பெரும் திருப்புமுனையுடனும் மிகப் பலத்துடனும் யாழ்ப்பாணத்தை விடுவிக்கும் போரில் பாரிய வெற்றிகளைக் கண்டனர் விடுதலைப்புலிகள். சிங்கள இராணுவத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்ட நிலையில் அந்நிய நாடுகளிடம் இராணுவப் பிச்சை கேட்டு அலறியடித்தது சிங்கள அரசு.

அன்று 87இல் இந்தியத் தலையீட்டை எதிர்த்து நின்ற இதே சிங்கள இனவெறியர்கள் இன்று அதே இந்தியாவிடம் இராணு உதவி கேட்டு நின்றனர். எம்மையும், எமது போரையும் அழிக்க எந்தப் பிசாசுடனும் கைகோர்க்க தயாராகியது சிங்கள சோவினிசம். தமிழீழ விடுதலை நிதர்சனமாவதை கண்ட சிங்களதேசமும் தனது இனவாதத்தை பச்சையாக வெளிப்படுத்தியது. தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்த சிங்கள அரசு சர்வதேச ரீதியாக தனது பொய் பிரசாரங்களை விரிவாக்கியது. அந்நிய ஆதிக்க அரசுகளின் உதவியுடன் நவீனரக ஆயுதங்களைப் பெற்று 500க்கும் மேற்பட்ட நமது மக்களை குண்டுவீச்சினால் ஒரே வாரத்தில் கொன்றொழித்து விட்டு தற்பொழுது சமாதானம், பேச்சுவார்த்தை எனத் தூதுவிட்டுள்ளது சிங்கள அரசு.

எம்தேசத்தின்மீது போர் என்றால் போர் என்ற கர்ஜிப்புடன் கட்டவிழ்க்கப்பட்ட, இந்த இனஅழிப்புப் போரைத் தொடக்கியது சிங்கள அரசே. இருந்தும், இன்று சமாதானத்திற்கான முன்முயற்சிகளை முன்கையெடுத்துச் செயற்படுத்தும் ஒரு வரலாற்றுச் சந்தர்ப்பத்தை நாமே உருவாக்கியுள்ளோம்.

ஆம், இன்று நமது தேசமும், விடுதலைப் புலிகளும் புதிய வரலாற்றுடன் முன்னெப்பொழுதும் இல்லாத வெற்றிகளைப் படைத்துள்ள நிலையில், போர் புலத்தில் சமபலநிலை எமது பக்கம் ஓங்கி இருந்தும், தொடர்ச்சியான இராணுவ வெற்றிகளுக்கு சாத்தியமிருந்தும் அவற்றையெல்லாம் நிறுத்தி விட்டு, எமது தேசம் சமாதானத்திற்கான நியாயமான கோரிக்கைகளை முன்வைக்கும் இச்சந்தர்ப்பத்தையும் நாம் பலவீனத்திலிருந்தே சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு வருகின்றோம் என மீண்டும் முட்டாள்தனமாக பகற்கனவு காணும் சிங்கள அரசிற்கும் அதனை தாங்கி நிற்கும் பிராந்திய, சர்வதேச ஆதிக்கக் குழுமத்திற்கும் எமது தேசம் ஓரணி திரண்டு ஒரே குரலில் சொல்வது:

**சமாதானம் என்றால் சமாதானம்!**

**போர் என்றால் போர்!!!**

- ராகவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### தமிழீழ மக்கள் குடியரசின் அடிப்படைப் பிரிவினர்கள்: 03

# மீனவர்கள்

நமது தேசத்தின் அழியாச் செல்வங்களில் ஒன்று விரிந்தகன்ற கடல்வளம். கடல் உணவுகளை பெறுவதற்குரிய மிகச் சிறந்த படுக்கைகளும், கனிப்பொருள் வளங்களும், துறைமுக வசதிகளும் கொண்ட இயற்கை வளமாக நமது கடற்பரப்பு விளங்குகின்றது. தமிழீழத்தை முழுவதுமாக தழுவிச் செல்லும் பரந்த கடற்பரப்பானது காலங்காலமாக நமது மீனவச் சமூகத்தின் வாழ்வுக்கான உயிருள்ள ஆதாரமாக அமைந்து வந்திருக்கின்றது.

ஐரோப்பிய ஆக்கிரமிப்புக்கு முன்னர், நமது மீனவர்கள் பாரம்பரிய முறைப்படி மீன்பிடிப்பதிலும், சங்கு சேகரிப்பதிலும், கப்பல் தொழிலிலும் ஈடுபட்டு வந்திருக்கின்ற ஆற்றல் மிக்க சமூகமாக விளங்குகின்றனர். ஐரோப்பிய ஆக்கிரமிப்பானது சங்குசேகரிப்பதிலும் கப்பல்தொழிலிலும் கணிசமான பாதிப்புகளைஏற்படுத்திய போதிலும் கூட, தமது பாரம்பரிய வாழிடப்பகுதியில், தமது மீன்பிடி தொழிலை மேற்கொண்டு வருவதில் பாரிய இடர்களை நமது மீனவர்கள் எதிர்கொள்ளவில்லை.

ஆனால், சுதந்திரத்தின் பின் சிறிலங்கா அரசின் இன அடக்குமுறைகள் படிப்படியே தீவிரமடைந்து வந்தபோது, அதன் கொடிய தாக்குதல்களுக்குள்ளாகிய ஒரு சமூகப் பிரிவினராக நமது மீனவர்களும் அமைந்தார்கள். நமது தேச இருப்பை சிதைப்பதற்காக, சிறிலங்கா அரசு முன்னெடுத்த இலக்குகளில், தமிழீழத்தின் நிலத்தொடார்ச்சியை அழிப்பது என்பது முக்கிய இடத்தைப் பெற்றது. எனவே, சிறிலங்கா அரசு கடும் மூர்க்கத்துடன் நமது கரையோரப் பகுதியில் (குறிப்பாக தென்தமிழீழம் மற்றும் மத்திய தமிழீழம் பகுதியில்) பெரும் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டது. தடையற்ற கடன் வசதிகள்,நவீன உபகரணங்கள், சந்தைப்படுத்துவற்கான வாய்ப்புகள்... என பிரம்மாண்டமான வசதிகளுடன் இந்த சிங்களக் குடியேற்றங்கள் முன்னெடுக்கப்பட்டன. இத்தகைய வசதிகளுடனும், ஆக்கிரமிக்கும் வன்மத்துடனும் நமது கரையோரங்களில் குடியேற்றப்பட்ட சிங்கள மீனவர்களினால் நமது மீனவர்களின் தொழிலுக்கு மட்டுமல்ல, அவர்களின் உயிர் வாழ்வுக்கும், வாழ்விடத்திற்கும் பாரிய அச்சுறுத்தல்கள் ஏற்பட்டன. தமது இருப்பிடங்களும் தொழில் உபகரணங்களும் அழிக்கப்பட்ட நிலையில், நமது மீனவர்கள் தமது பாரம்பரிய வாழ்விடங்களிலிருந்து வெளியேற வேண்டிய நிலை பல இடங்களில் ஏற்பட்டன. எஞ்சிய மீனவர்கள் இன்றுவரையிலும் அச்சத்துடனும், கடினமான சூழலை எதிர்கொணடவர் களாகவுமே தமது வாழ்வை நகர்த்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

மறுபுறம் வட தமிழீழமானது, 1980கள் வரை மீன்பிடித் தொழிலில் அதன் உச்சத்தை எட்டியிருந்தது. முழுத்தீவினதும் மொத்த மீன் உற்பத்தியில் மூன்றில் ஒருபகுதி என்ற உயர்ந்த அளவுக்கு வடதமிழீழத்தில் மீன்பிடித் தொழில் செழித்திருந்தது. இந்த நிலையை மாற்றுவதற்கு சிறிலங்கா அரசு திட்டமிட்டு செயற்பட்டு வந்திருந்தது. கடற்றொழிலில் வெளிநாட்டு ஊடுருவலை ஏற்படுத்தியதன் மூலம் நமது மீனவர்களின் அபிவிருத்திக்கு தடை போட்டது.



முழுத்தீவினதும் மொத்த மீன் உற்பத்தியில் மூன்றில் ஒருபகுதி என்ற உயர்ந்த அளவுக்கு வடதமிழீழத்தில் மீன்பிடித் தொழில் செழித்திருந்தது. இந்த நிலையை மாற்றுவதற்கு சிறிலங்கா அரசு திட்டமிட்டு செயற்பட்டு வந்திருந்தது.

இவ்வாறு நமது மீனவர்களை ஆக்கிரமித்து அடக்கிவந்த சிறிலங்கா அரசு, 1980களிலிருந்து படிப்படியே அவர்களின் தொழில்சார் நடவடிக்கைகளின் மீது கடுந்தாக்குதலை மேற்கொண்டது. யுத்த சூழல் காரணமாக காப்பு, கடற்றொழிலுக்குரிய எல்லைகளை சுருக்கியும், நேரத்தைக் குறைத்தும் வந்திருப்பதோடு பல இடங்களில் கடற்றொழில் முற்றாக நடைபெறாதுள்ளது. தான் அனுமதித்துள்ள எல்லைக்குள்ளும், நேரத்திற்குள்ளும் தொழிலுக்காக செல்கின்ற நமது மீனவர்கள் மீது வன்முறைத் தாக்குதல்களை மேற்கொள்வதன் மூலமும், இத்தனை சிரமங்களுக்கு மத்தியிலும் அவர்களால் பிடிக்க முடிகின்ற மீன்களை பறித்தெடுப்பதன் மூலமும், சிறிலங்கா அரசு நமது மீனவர்களை கிட்டத்தட்ட தொழில் ரீதியாக முடமாக்கியுள்ளது. இதுவரை தொழில் ரீதியாகவும், வாழ்விட ரீதியாகவும் பாதுகாப்பு உத்தரவாதமற்றிருந்த நமது மீனவர்கள் இப்போது, பொருளாதார ரீதியாகவும் நிர்க்கதியாக்கப் பட்டிருக்கின்றார்கள்.

சிறிலங்கா அரசின் இன அடக்குமுறையின் முதன்மை தெரிவுகளில் ஒன்றாக, நமது மீனவ சமூகமே மாற்றப்பட்டமையானது, சிறிலங்கா அரசுக்கு எதிரான போராட்டத்தில் - குறிப்பாக ஆயுத போராட்டத்தில் அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பங்குகொள்வதற்கு அடிப்படையாக அமைந்தது. தன்மீதான சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பும் அடக்குமுறையும் வன்மமடைந்ததற்கு ஏற்ப, நமது மீனவ சமூகத்தைச் சேர்ந்தவர்கள், சிறிலங்கா அரசுக்கு எதிராக ஆயுத போராட்டத்தில் பங்கெடுப்பதும் அதிகரித்து வந்திருந்தது. விடுதலைப் புலிகள் அமைப்பின் தோற்றத்திற்கும், அந்த அமைப்பில் இதுவரை குன்றாதிருக்கின்ற போர்க் குணாம்சத்திற்கும், அதில் ஆரம்பத்திலிருந்தே முக்கிய பாத்திரம் வகித்து வந்திருக்கின்ற மீனவ சமூகத்தைச் சேர்ந்தோரின் பங்கு உறுதியான அடித்தளமாக அமைந்திருக்கின்றது. கடற்புலிகள் என்ற பலமிக்க படைப்பிரிவை விடுதலைப் புலிகள் உருவாக்கி பேணுவதில் நமது மீனவர்களின் அளப்பரிய அர்ப்பணிப்புகளும், தியாகங்களும் பிரதான பங்கு வகித்து வருகின்றன.

நமது மீனவ சமூகத்தின் துயரங்களும், அர்ப்பணிப்புகளும், தீரமும் அதற்குரிய அர்த்தத்தைக் கொண்டிருக்கின்றன. தமது சுயவாழ்வுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டமைக்காகவும், அடக்கப்பட்டதற்காகவும், வாழ்வதன் அவமானத்திலிருந்து விடுபட வேண்டும் எனும் ஆவேசமே அவர்களை மாபெரும் அர்ப்பணிப்பாளர்களாகவும், நிரந்தர போராளிகளாகவும், படைத்தளபதிகளாகவும் மாற்றியுள்ளது. இவை அனைத்தும், நமது தேசத்தின் ஒரு பிரிவு என்ற அடிப்படையில் அவர்கள் மத்தியில் கனன்று கொண்டிருக்கின்றன விடுதலைப் பற்றின் ஆக்ரோஷ வெளிப்பாடுகளாக அமைந்திருக்கின்றன. இவ்வகையில் நமது தேசத்தின் அரசியல் தளத்தில் நமது மீனவ சமூகத்தின் அபிலாஷைகள், ஆன்மீக நலன்கள், உரிமைகள் என்பன மிகவலுவான முறையில் உள்ளடக்கப்பட வேண்டும்.

வாழ்க்கையை தமக்கேயுரிய தனித்துவமான விதத்திலும், துணிவுடனும் எதிர்கொண்டு வந்திருக்கின்ற நமது மீனவர்களின் பூரண கட்டுப்பாட்டிற்குள் நமது கடல் வளம் உள்ளடக்கப்பட வேண்டும். தமது வாழ்விடத்தின் மீதும், தமது தொழிலின் மீதும் அவர்களுக்குள்ள உரிமை மீண்டும் நிலைநிறுத்தப்பட வேண்டும். மீனவர்களின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டதும், அவர்களின் பங்கேற்புடன் கூடியதுமான திட்டமிடல்களின் அடிப்படையில், கடற்றொழிலில் அவர்களின் முடிவுகளுக்கேற்ப விரிவுபடுத்தக் கூடிய, மேம்படுத்தக் கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். தாம் பிடிக்கின்ற கடல் உணவுகளை சேமிக்கவும், சந்தைப்படுத்தவுமான தடையற்ற வாய்ப்புகள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பினாலும், அடக்குமுறையினாலும் வேரோடு பிடுங்கி எறியப்பட்டுள்ள நமது மீனவர்களின் வாழ்வு மீண்டும் உறுதியா நிலைநிறுத்தப்பட வேண்டும். இவற்றை சாத்தியமாக்குவதற்கான ஒரே வழி, நமது மீனவர்களையும் ஒரு பிரதான கூறாகக் கொண்டிருக்கின்ற, தமிழீழ மக்கள் குடியரசு நிறுவப்படுவதுதான். நமது மீனவர்களின் நலன்களை உத்தரவாதப்படுத்துகின்றன ஒரு மக்கள் குடியரசுதான் அவர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வாக அமையும்.

**- வரதன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடுதலைக்கு குறுக்கே இந்திய அரசு... ஏன்?

**1980** களில் இந்திய மத்திய அரசுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையில் காணப்பட்ட பகைமை உறவின் தன்மைக்கு தலைகீழான நிலைமை தற்போது காணப்படுகின்றது. அன்றைய உலக ஒழுங்கு இப்போது மாறிக்கிடப்பது பிரதான காரணமாயினும், இந்த உறவில் வேறு சில மாற்றங்களும் உள்ளார்ந்து ஏற்பட்டுள்ளன.

அப்போது சிறலங்கா அரசு அமெரிக்க அரசுக்கும் மேற்கு நாடுகளுக்கும் மட்டும் விசுவாசியாகவும் அனைத்து நலன்களையும் வளங்களையும் தாரை வார்த்திருந்தது. இந்திய அரசின் ஆதிக்க நலன்களை கணக்கில் எடுக்காமல் செயற்பட்டு வந்தது என்பது அனைவரும் அறிந்ததே. இந்தியஅரசு தொடர்பான அயலுறவுக் கொள்கை தொடர்பாக சிறிலங்காவின் ஆளுங்குழுமத்தினுள் தீவிர முரண்பாடுகளும் விவாதங்களும் அப்போது நடைபெற்று வந்தன.

தற்போதைய உலக ஒழுங்கில் அமெரிக்க அரசு மற்றும் இந்திய மத்திய அரசு ஓரணியில் நிற்கின்றன. அது மட்டுமல்ல. தென்னாசிய பிராந்தியத்தின் பெருமளவு வளங்களை ஆண்டு அனுபவிக்க பெருவேட்கை கொண்டலையும் அமெரிக்க அரசு மிகச்சில பகுதிகளை இந்திய மத்திய அரசுக்கென விட்டு வைத்து தன் தென்னாசிய அணிச்சேர்க்கையை நீண்ட கால நோக்கில் பாதுகாத்துக் கொண்டுள்ளது. இந்த முயற்சியை அமெரிக்கா 20 வருடங்களுக்கு முன்பே தொடங்கிவிட்டது.

இந்த புதிய பின்புலத்தில், கடந்த பத்து வருடங்களாக சிறிலங்கா அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் உறவு மிக நெருக்கமடைந்து வருகின்றது. விடுதலைப்போராட்டத்திற்கு எதிராக இரண்டு அரசுகளுக்கும் இடையில் நிலவிய பொதுவான ஆக்கிரமிப்பு, ஆதிக்க நலன்களும், இரண்டு அரசுகளின் ஆளுங்குழுமங்களின் குறிப்பான பல்வேறு நலன்களும் இந்த நெருக்கமான உறவிற்கு வேகமாக வழிவகுத்தன. பொருளாதார மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் பல செய்யப்பட்டுள்ளன. பல அக எதிர்ப்புகளையும் மீறி சிறிலங்கா அரசு தனது நலன்களில் கணிசமானவற்றை இந்திய அரசுக்காக விட்டுக் கொடுத்துள்ளன.

தற்போது இந்திய மத்திய அரசின் ஆபத்தான அணுகுமுறைகளும் அதற்கான பின்னணிகளும் குறித்து ஆழமான விவாதங்கள் நடைபெறவில்லை என்பதைக் கருத்தில் கொண்டு சில விடயங்களில் உடனடிக் கவனத்தைக் குவிக்கின்றோம். இவை ஒவ்வொன்றும் தனித்தனியாக விரிவாக ஆராயப்பட வேண்டியவை. இந்திய மத்திய அரசு நமது மக்கள் மத்தியில் பரப்பிவரும் ஆபத்தான மாயையை தகர்த்தெறிய தொடர்ச்சியான முயற்சிகள் அவசியமாகும்.

பாதுகாப்புத்துறையில் இந்திய அரசிற்கு நமது பிராந்தியத்தில் குறிப்பான நலன்கள் உள்ளன. தென்னாசிய கடற்பரப்பில் தன் ஆதிக்கத்தை நிறுவுதல், சிறிலங்கா அரசுக்கு படைக்கலங்கள் விற்பனை மூலம் பெரு இலாமீட்டுவது. படிப்படியாக ஆயுத விற்பனையை ஏகபோகமாக்கிக்கொள்வது. பாகிஸ்தான் அரசுடனான சிறிலங்கா அரசின் உறவினை பலவீனப்படுத்துவது. சிறிலங்கா முப்படைகளுக்கும் பயிற்சிகள் வழங்குவதன் மூலம் வருமானம் திரட்டுவதுடன் சிறிலங்கா உயர்பாதுகாப்பு நிறுவனங்கள் மற்றும் துறையாட்கள் மத்தியில் தன் செல்வாக்கையும் விசுவாசிகளையும் எப்போதும் கொண்டிருத்தல்.



உற்பத்தித்துறையில், பெருந்தோட்டத்துறை தனியார் மயப்படுத்தல் பிரேமதாச காலத்தில் நடைபெற்றபோது, இந்திய மூலதனச்சொந்தக்காரர்கள் குறிப்பாக தமிழக ஆளுங்குழுமத்தைச் சோந்தவர்கள் தோட்டங்களை நேரடியாயும் பினாமிகளுக்கூடாகவும் வாங்கிக் கொண்டனர். தோட்டத் தொழிலாளர்களின் நலன்களுக்கு குழிபறிக்கும் பெருமளவு தோட்டக்கம்பனிகளின் உரித்தாளர்களால், பெருமளவு இந்திய மூலதனமும் தொழிலாளரைக் கசக்கிப்பிழியும் அதன் பெருந்தோட்டத்துறை அனுபவங்களும் செயற்பட்டு வருகின்றது. இதர விவசாய உற்பத்தி பொருட்களுக்கும் இந்தியஅரசின் திறந்த சந்தையாக இத்தீவு மாற்றப்பட்டுள்ளது. இதன் காரணமாக விவாசாய வர்க்கங்களுக்கும் சிறிலங்கா ஆதிக்க குழுமத்திற்கும் இடையில் தொடர்ச்சியாக முறுகல் நிலவிவருவது அறிந்ததே.

போக்குவரத்துதுறையில், வண்டி வாகனங்களின் இறக்குமதிகளும் பெருமளவு இலாபமும் இந்திய மத்திய அரசினால் ஈட்டப்படுகின்றது. பெரிய பேரூந்துகள் தொடக்கம், மாருதி வண்டிகள் மற்றும் முச்சக்கர மற்றும் இருசக்கர வண்டிகளின் சந்தையாக இத் தீவினை சிறிலங்கா அரசு இந்தியநலன்களுக்கு தாரை வார்த்துள்ளது. இதற்கான பல ஒப்பந்தங்கள் இரகசியமாகவும் பரகசியமாகவும் செய்யப்பட்டுள்ளன.

நிதித்துறையில், வணிக வங்கிகள், பங்கு சந்தைகளில் இந்திய மூலதனம் இங்கு பெருமளவில் மையங்கொண்டுள்ளது. கடனுதவிகளும் வட்டிகளை சுருட்டிக்கொள்வதும் அதிகரித்து வருகின்றது. வர்த்தகத் துறையில், பல்வேறு சிறிய பெரிய பாவனைப் பொருட்களின் முக்கிய சந்தையாக மாறிவரும் சிறிலங்காவிற்கு. சினிமாதுறையிலும் தன் உற்பத்திகளை இந்திய அரசு இப்போது பெருமளவில் விற்றுத்தள்ளுகின்றது.

மேற்படி சந்தை ஆதிக்கம் காரணமாக இங்கு இந்திய அரசுக்கு எதிரான போக்குகள் எழுந்து விடக்கூடாது என்பதனால் மிகவும் கவனமாக விடுதலைப்புலிகளுக்கும் தமிழீழ விடுதலைக்கும் எதிராக தான்செயற்படுவதாக சிங்கள மக்கள் மத்தியில் பலமான சித்தாந்த ஆதிக்கத்தை நிலைநாட்டி அதனை நடைமுறையிலும் இந்திய அரசு பேணி வருகின்றது. இந்திய படைகளை சிங்கள தேசம் தமக்கு உதவியாக அழைக்கும் அளவிற்கு நிலைமை மாற்றப்பட்டுள்ளது.

அரசியல் தளத்தில், இந்திய மத்திய அரசானது தன்கீழுள்ள பல்வேறு தேசங்களையும் கடுமையான அடக்குமுறைக்குள் வைத்துள்ளது. தேசங்களின் சிறைக்கூடத்தின் தகர்வு தவிர்க்க முடியாதது என்ற வரலாற்று விதிமீதான அச்சம் காரணமாக, இந்தப்போக்கானது, தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் உத்வேகம் காரணமாக மேலும் தீவிரமடையக் கூடும் என்ற அளவு கடந்த பீதியை இந்திய மத்திய அரசுக்கு ஏற்படுத்தி வருகின்றது. இந்திய அரசின் ஆதிக்கத்தின் கீழ் அமையும் தேசங்களின் மீதான அடக்குமுறைகளும் அதன் விளைவாக இந்திய தேசியம் என்ற கருத்தாக்கம் படிப்படியே சிதைந்து வருவது ஒருபுறம் நடைபெறுகின்றது. தற்போது திறந்த பொருளாதாரமும் அதன் காரணமாக மானில அரசுகளுக்கும் மத்திக்கும் முரண்பாடுகள் இச்சிதைவினை கூர்மைப்படுத்தும் நிலையில் காணப்படுவதும், மானில அரசுகளில் ஏற்பட்டு வரும் பார்ப்பனிய எதிர்ப்பு இந்தி எதிர்ப்பு மற்றும் மத்திய அரசுக்கு எதிரான போக்குகளும் அது வலுப்பெறுவதற்றாகான வாய்ப்பை ஈழவிடுதலை தரும் என்ற அச்சமும் இந்திய ஆளுங்குழுமத்தையும் அதன் மானில அரசியல் தரகர்களையும் வாட்டி வதைக்கின்றது.

இந்திய அரசின் பிராந்திய ஆதிக்கத்திற்கு சிறிலங்கா அரசு அடிமைபட்டுக்கிடக்க, நமது தேசத்தில் நிலைமை இந்தியா நலன்ககளுக்கு அடிமைப்படாது திமிறி எதிர்த்து நின்று போராடுகின்றது. ஈழ சுதேசியம் என்ற குறிப்பான பண்பானது இந்திய மத்திய அரசு ஆளுங்குழுமத்திற்கு எரிச்சலைத் தரும் எதிர்கால சிக்கல்களாக கருதப்படுகின்றது.

இதைவிட, ஐ.நா.வில் நிரந்தர பாதுகாப்பு உறுப்புரிமைக்கு அமெரிக்க அரசின் அனுசரணையுடன் இலக்கு வைத்துள்ள இந்திய அரசு சிறிலங்கா அரசின் ஒத்துழைப்பு வாக்கினை நாடி நிற்பதையும் குறிப்பிடலாம் . இப்படியான கூட்டு ஆதிக்க நலன்களின் அடிப்படையில் அதனைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்குடன் எப்போதும் இந்திய மத்திய அரசு செயற்பட்டு வருகின்றது. நமது மக்களின்பிரச்சனை என்னவெனில், அரை நூற்றாண்டு கால போராட்டத்தையும் அர்ப்பணிப்புகளையும் நமது தேசத்தின் இறைமையையும் இன்னுமொரு ஆதிக்கத்திற்கு தாரை வார்க்க முடியாது என்பதாகும். ஒரு எஜமானனுக்கு பதிலாக இன்னுமொரு எஜமானரை மாற்றிக்கொள்வது விடுதலைப்போராட்டமும் அல்ல. அரசியல், சமூக, பொருளாதார விடுதலையும் அல்ல. இந்த நிலைப்பாட்டை எத்தகைய நெருக்கடிகள் வந்தாலும் நாம் கைவிட்டுவிடக்கூடாது. அது இந்திய அரசாக இருந்தாலும் அமெரிக்க ஏகாதிபத்தியமாக இருந்தாலும் பொதுவானதே.

\- விஜி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எழுச்சியுறும் மலையக தமிழ் தேசம்!



போராட்டங்களின் மூலம்தான் விடுதலையுணர்வு புடம்போடப்படுகிறது. போராட்டங்களினூடாக செப்பனிடப்பட்டு உருப்பெற்றதே மலையக தமிழ் தேசம். அடக்குமுறைகள் - கிளர்ச்சிப் போராட்டங்கள் - மீண்டும் அடக்குமுறைகள் - மீண்டும் எழுச்சி... இதுதான் மலையகத்தின் வரலாறு.

வீரம்செறிந்த இத்தேசம் சூழவுள்ள சிங்கள இனவெறி அச்சுறுத்தலையும், சிங்கள பாசிச அரச இயந்திரத்தின் அடக்குமுறைகளையும் துச்சமெனக் கொண்டு இம்முறையும் வீறு கொண்டெழுந்தது. பிந்துனுவெவ புனர்வாழ்வு மையத்தில் நடைபெற்ற மானுட விரோத குரூரத்தை எதிர்த்து தமது கோபாவேசத்தை வெளிப்படுத்தியும், வளர்ந்து வரும் சிங்கள பாசிசத்தை உலகின் முன் தோலுரித்துக் காட்டியதாகவும் இவ்வெழுச்சி அமைந்தது.

தமது பிரதேசத்தில் நடைபெற்ற இன அச்சுறுத்தல், தமது தேசத்து இளைஞன் படுகொலை செய்யப்பட்டமை, புனர்வாழ்வெனும் பெயரில் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஈழத்தமிழ் இளைஞர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வெறித்தனத்தினை கண்டித்தல் என ஒருசேர இப்போராட்டம் பன்முக எதிர்ப்பைக் கொண்டிருந்தது. அரச வன்முறையினாலும், சிங்கள இனவெறி காடைத்தனத்தினாலும் நசுக்கப்பட்டாலும் இவ்வெழுச்சியின் அரசியல் கனதி அளப்பரியதாகும். இது சிங்கள அரசை ஒரு உலுப்பு உலுப்பித்தான் விட்டது.

மலையக தமிழ் தேசத்தின் கொந்தளிப்புக் கண்டு சிங்கள அரசு அஞ்சுகிறது. எவ்வழியிலாவது இத்தேசத்தின் துடிப்பான போர்க்குணாம்சத்தை நசுக்கி வைப்பதிலேயே அதன் வன்ம சிந்தனைகள் மையங்கொண்டுள்ளன. 40களில் உழைக்கும் வர்க்க அடையாளத்துடன் மலையக தேசம் இலங்கை அரசியலில் ஆளுமை செலுத்த தொடங்கியதை கண்டுகொண்ட அன்றைய டி.எஸ். சேனநாயக்க தலைமையிலான சிங்கள அரசு குடியுரிமையையும் பிரஜாவுரிமையையும் பறித்ததன் மூலம் அத்தேசத்தின் அரசியல் ஆன்மாவை அறுத்தெறிந்து, தேசிய இருப்பை சிதறடித்தது.

திட்டமிட்ட தேசிய அடக்குமுறைகளையும் அழித்தொழிப்புகளையும் கடந்து, மலையகத் தேசம் உயிர்த்தது. தம்மீது ஏவப்பட்டுவரும் அனைத்து வடிவங்களிலுமான சிங்கள வெறியாட்டங்களையும் எதிர்கொண்டு, அதற்கெதிராக தன்னை தகவமைக்கத் தொடங்கியது. இம்முறை, சிங்கள பாசிச குரூரத்திற்கு எதிராக தனது தேசிய அடையாளத்துடன் ஆக்ரோஷமாக ஆர்ப்பரித்து வெளிப்பட்ட மலையக எழுச்சியை கண்டு அஞ்சிய சிங்கள அரசு, மீளவும் 48இன் பிரஜாவுரிமைச் சட்டத்தினையொத்த "சட்டவழிப்பட்ட" அடிமைப்படுத்தலினூடாக முழு மலையக மக்களையும் அடக்கிவைத்திட எத்தனிக்கிறது.

சிங்கள இனவாத கண்களுக்கு மலையகம் என்பது ஒரு "அடிமை" சமூகமாகவே தெரிகிறது. எனவே புதிது புதிதாக அடிமைத்தனமான அடையாளங்களை மலையகத்தின் மீது திணித்து தமது சிங்கள தேச பொருளாதாரத்திற்கு அடிமை உழைப்பை வழங்கிடும் மக்கள் பிரிவாக மலையக தேசத்தை தொடர்ந்தும் கட்டிப்போட்டு வைத்திருக்க முயல்கிறது. இந்த அதிகாரத்துவ ஆக்கிரமிப்பின் வெளிப்பாடுதான் மலையகத் தமிழருக்கு தனியான வதிவிட அடையாள அட்டை வழங்கிட வேண்டும் எனும் சிங்கள அரசின் கபடத் திட்டம்.

70களில் சிறிமாவோ ஆட்சியில் மலையகத் தமிழரை குடும்பங்களைத் துண்டாடி கதறக்கதற கப்பலில் ஏற்றி நாடுகடத்தியும், தோட்டங்களைவிட்டு துரத்தியடிப்பதிலும் முன்னின்று செயற்பட்ட அதே தி.மு.ஜயரத்ன தான் இம்முறையும் இந்த அநாகரீகமான வதிவிட அடையாள அட்டைத் திட்டத்தை அமுலாக்குவதில் முன்கையெடுத்து செயற்படும் இனவெறியன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மலையகத் தமிழர் மீதான சிங்கள பாசிச அரசின் அனைத்து விதமான அடக்குமுறைகளையும், அழித்தொழிப்புகளையும் இந்திய அரசு வெளியில் போலிக்கண்ணீர் வடித்துக்கொண்டு, உள்ளே மறைமுகமாக வரவேற்கிறது. 48இல் டி.எஸ். சேனநாயக்க அரசினால் பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது அதை நேரு அரசாங்கம் ஏற்றுக்கொண்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. அதன் பின்னர் மத்தியில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களும் சிங்கள அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கும் விதமாக மலையகத் தமிழரை நாடுகடத்தும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டு மலையக தேச இருப்பை சிதறடிக்கும் காரியங்களில் பங்கேற்றன.

இதோ, இம்முறை எத்தனை குரூரமான வெறியாட்டத்தை மலையகத் தமிழர் மீது சிங்கள அரசு மேற்கொண்டுள்ளது. அது பற்றி இந்திய மைய அரசு ஏதாகிலும் ஒரு கண்டனம் விடுத்ததா? தமிழீழ விடுதலைப் போராளிகள் சிங்கள அரசிற்கெதிராக சிறுதாக்குதல் நடாத்தினாலும் "பயங்கரவாத" கூப்பாடுபோடும் இந்த ஆதிக்கசக்தி, தமிழரின் இரத்தத்தால் மலையகப் பிரதேசம் நனைந்து சிவந்தபோது, அப்படி எந்த சம்பவமுமே நடவாததுபோல் கண்களை மூடிக்கொண்டுள்ளது.

மலையகத் தமிழரை அடக்கிவைத்திருப்பதில் அப்படி என்ன நன்மைகள் இந்தியாவுக்குண்டு? இன்று மலையகத்தின் பெரும்பாலான தோட்டங்களை இந்திய முதலீட்டு நிறுவனங்கள் உடமைகொண்டுள்ளன. மலையக தோட்டங்களின் பெருமளவு செல்வங்களை சிங்கள அரசின் துணைகொண்டு இந்திய அதிகார வர்க்கம் அபகரித்து வருகிறது. தமிழகத்தின் தேயிலைத் தோட்டத் தொழிலாளரின் போராட்டங்களை காட்டுமிராண்டித்தனமாக நசுக்கியழிக்கும் இந்திய அரசு மலையகத் தமிழரையும் அவ்வாறே அடக்கி வைத்திருப்பதன் மூலம் இந்திய முதலீட்டு நிறுவனங்களின் நலன்களைப் பாதுகாக்க விளைகிறது.

அத்துடன் மலையகத் தமிழரின் "பிரஜாவுரிமை" "நாடற்ற இந்தியர்" பிரச்சனை சார்ந்து இந்திய அரசுக்கு சிறிலங்காவின் அரசியலில் தலையீடு செய்வதற்கான அதிகாரம் ஒன்று இருந்து வருகிறது. இதனை வாய்ப்பாக பயன்படுத்தி தேவைக்கேற்ப சிறிலங்கா அரசுக்கு அழுத்தங்களை கொடுப்பது இந்தியாவின் நோக்கம். மலையக தமிழரின் அரசியல் பிரச்சனைகள் தீர்க்கப்படாதிருப்பதில் இந்தியாவின் பிராந்திய ஆதிக்க நலன்களும் பிண்ணிக் கிடப்பது கவனிக்கத் தக்கது.

மலையக தமிழ் தேசத்தை உரிமைகளற்ற அடிமைச்சமூகமாக அடக்கி மிதித்து வைத்திருப்பதன் பின்னணியில் செயற்படும் இந்திய அரசின் சுயரூபம் தோலுரிக்கப்பட்டு வருகிறது. தமது எதிரியாக செயற்படும் இந்திய அரசை மலையக தமிழர்கள் இனிமேலும் நம்பப்போவதில்லை.

அது மாத்திரமல்ல, மலையகம் கொந்தளித்துக் கொண்டிருந்த போது தமிழகத்தில் எந்த சலனங்களும் இல்லை. மலையகத்திற்கும் தமிழகத்திற்குமான தொப்புழ்க்கொடி உறவென்பது முற்றுப்பெற்ற ஒரு வரலாறு. மலையக தேசம் தானே தனது கரங்களின் வலிமையில் உருவாக்கிய மலையக மண்ணில் தனது வேர்களை பாய்ச்சி புதிய வரலாற்றை படைத்துள்ளது. அவ்வகையில் இந்திய அரசு எனும் மாயை மலையகத்தின் இன்றைய யதார்த்தத்தில் கடந்தகால கனவுகளாக இருப்பது கூட மலையகத்தமிழரின் அரசியல் எதிர்காலத்திற்கு ஆபத்தானதாகும். மலையக மண்ணில் தான் படைத்திருக்கும் தனது வரலாற்றிலிருந்து தான் மலையகம் தன்னை அடையாளம் காண வேண்டும். இதுதான் மலையக தேசத்திற்கு வலிமை.

சொந்த போராட்ட பலத்தில் மலையக தேசம் தனது விடுதலையை வென்றுகொள்வதற்கு அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்கும் தார்மீகக் கடமை ஈழத்தமிழரான நமக்குண்டு. இன்று ஈழத்தமிழரான எமது தேசிய உரிமைக்காக சர்வதேச மட்டத்திலான அரசியல் பேச்சுவார்த்தை ஒன்றுக்கு தயாராகியுள்ள நம் தேசமானது, மலையக தமிழ் தேசத்தின் அரசியல் உரிமைகளை உரியமுறையில் பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரலில் இடம்பெறச் செய்திட வேண்டும்.

மலையக மக்கள் ஒன்றிணைந்து முன்வைக்கும் அரசியல் கோரிக்கைகளை நாம் ஆதரித்துப்பலப்படுத்த வேண்டும். அவர்களின் அரசியல் தலைவிதியினை தீர்மானிக்கும் உரிமை, சுயநிர்ணய உரிமை முற்றிலும் அம்மக்களுக்கேயுரியதாகும்.

- சுபத்திரா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## எச்சரிக்கையுடன்..

(2ஆம் பக்கத்தொடர்)

கும் மூலதனங்களில் பெரும் பகுதி போர்க்களத்தில் விரயமாகின்றது என்பதே. சிறிலங்கா அரசைப் பாதுகாக்க தாம் வழங்கிய, விற்ற பல்லாயிரம் கோடி பெறுமதியான போர்த்தளபாடங்கள் விடுதலைப் புலிகளின் கரங்களுக்கு போய் விடுகின்றன என்ற எரிச்சல். இன்னுமின்னும் யுத்தத்தை விரிவாக்குவதற்கு சிறிலங்கா அரசு எத்தனிப்பதன் மூலம் இத்தீவினை என்றென்றைக்கும் சுரண்டலுக்குட்படுத்த முடியாத நிலை ஏற்பட்டு விடக்கூடுமே என்ற பதைபதைப்பு. இதற்கு மேலும் அனுமதித்தால் ஒரு புதிய இளம் தேசிய அரசு உருவாகி, தென்னாசியாவின் மீது போடப்பட்டுள்ள ஆதிக்க சங்கிலியின் கண்ணிகள் வெடித்து சிதறிவிடுவதற்கான உந்து சக்தியாகி விடக் கூடுமே என்ற அச்சம்.

தொடக்கத்தில், போர்த்தளவாடங்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவிற்கு விற்பனை செய்து சிறிலங்கா அரசு இராணுவமயப் படுத்துவதை இந்த சக்திகள் தெரிந்தே ஏற்றுக்கொண்டன. ஆனால், அண்மைக்காலங்களில் விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்ட எதிர்பாராத திருப்பங்களை மதிப்பிட்டுத் திகைத்தன. அவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட யுத்ததளபாடங்கள் தகர்த்து தரைமட்டமாக்கப்பட்டதையும், அவர்களால் தரப்பட்ட பயிற்சிகள் கேலிக்கிடமாக்கப்பட்டதையும் கண்டு கொதிப்புற்றன. சிறிலங்கா அரசும் அதன் கட்டுமாணங்களும் சிதைந்து, அதன் ஆட்சித்திறன் பலவீனமடைந்து வருவதையும் கண்டு ஆதிக்க சக்திகள் இப்போது அதிர்ந்து நிற்கின்றன.

இறுதி முயற்சியாக, இந்த ஏகாதிபத்திய மற்றும் பிராந்திய ஆதிக்க சக்திகளின் பிரதிநிதிகளும், அவர்களின் உள்ளூர் தமிழ், சிங்கள முகவர்களும் கூடி இராஜதந்திர ஆலோசனை நடாத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு தரப்பும் தத்தமது நலனின் குறியாக நிற்கின்றனர். விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் தந்துள்ள சமாதானத்திற்கான இந்த வாய்ப்பினை சிறிலங்கா அரசு பற்றிக்கொள்ளத் தவறினால், விடுதலைப்புலிகள் அரசினை குற்றம் சுமத்த வாய்ப்பினை கொடுத்தாகிவிடும் எனவும் அப்படியான நிலைமை ஆதிக்க சக்திகளுக்கு தர்மசங்கடத்தினை தோற்றுவிக்கும் என்பதாகவும் தமக்குள் கவலையை பரிமாறிக் கொண்டிருக்கின்றார்கள். தேசியப்பிரச்சனையை உடனடியாக தீர்த்து வைப்பதாக கூறி செயல்முனைப்புக்காட்டும் இவர்களுக்கு நமது தேசியபிரச்சனையின் உண்மையான தார்ப்பரியத்தை புரிந்து கொள்ளும் கரிசனை இருப்பதாக தோன்றவில்லை. எனவேதான் அவர்கள் அனைவரையும் திருப்திப்படுத்தக் கூடிய தீர்வொன்றை தேடியலைந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் முயற்சியும் முனைவும் நமது தேசியப்பிரச்சனையில் ஆழத்தை தொட்டு நிற்கவில்லை என்பதனால், ஒட்டுமொத்த ஆதிக்க கூட்டினால் அடக்கப்பட்டு வரும் தேசமாகிய நாம் இந்த இந்த இராஜதந்திர நாடகங்கள் குறித்து எப்போதும் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிருப்போம். அரசியல் பேச்சுக்களில் வெற்றிகளை பதிக்க எச்சரிக்கையுடன் நடைபோடுவோம். எமது அடிப்படை அரசியல் உரிமைகளில் உறுதியாக ஊன்றி நிற்போம்.

-தருமு

## ஜனதா விமுக்தி பெரமுன..

(1ஆம் பக்கத்தொடர்)

கோரி போராட்டம் நடாத்தியுள்ளதா? வீதிக்கு இறங்கியுள்ளதா? இதற்கான அரசியல் துணிச்சல் அதற்கு இருந்ததுண்டா?

எப்போதோ, பிளவுற்றுத் துண்டாகித் தனித்தனியாக கிடக்கும் அரசியல் தனித்துவம் மிக்க தேசங்கள். தமிழீழ தாயகத்தின் மிகக் கணிசமான பகுதி மீட்கப்பட்டு விட்டது போன்ற யதார்த்தங்களுக்குப் பின்பும், நாடு துண்டாடுவதை எதிர்க்கப்போவதாக கூறும் இக்கட்சி உண்மைகளை தரிசிக்க இன்னும் எத்தனை வருடங்களாகுமோ?எப்போதுமே, தமிழ் மக்களின் தேசிய அரசியல் என வரும்போது மட்டும் மிக தீவிரமாக களத்தில் குதிக்கும் ஜேவிபி, சிங்கள மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டிருக்கும் தேசியவெறியை தனது வெற்றிக்கு அடித்தளமாக பயன்படுத்தும், முன்னய இனவாதக் கொள்கையை இன்னமும் தான் கைவிடவில்லை என்பதை காட்டியுள்ளது.

ஒவ்வொரு முறையும், சிங்கள மக்களை சரியான புரட்சிகர அரசியல் கொண்டு சித்தாந்த மயப்படுத்தாமல், சந்தர்ப்பவாதமாக நிலைமைகளை பயன்படுத்த முயலும் இக்கட்சி, ஈற்றில் தனது சொந்த மக்களின் ஆதரவு இன்றி அரச பயங்கரவாதத்தால் அழித்தொழிக்கபடும் அனுபவத்தில் இருந்து எதனையும் கற்றுக்கொள்ளவில்லை. தமிழ் மக்களின் தேசியப்போராட்டம் அரைநூற்றாண்டு காலம் எவ்வாறு நின்று நீடித்து நிலைக்கின்றது என்பதைப்பற்றி சற்றாவது ஆராய்ந்திருந்தால் அது பல பாடங்களைக் கற்றுக்கொண்டிருக்கக் கூடும். இதுவரை ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமது சொந்த சிங்கள தோழர்களை பலிகொண்ட அரசபடைகள் இப்போது இக்கட்சிக்கு தேசபக்த வீரர்களாக உள்ளனர்.

அமெரிக்கா, நோர்வே போன்ற நாடுகளை எதிர்த்து வீறுகொண்டெழுவதாக காட்டிக் கொள்ளும் இக்கட்சி, அமெரிக்க, பிரித்தானிய மற்றும் இஸ்ரேல் பாதுகாப்புத் துறையானது, தமிழர் போராட்டத்தினை நசுக்குவதற்கும் தமிழ் மக்களை அழித்தொழிப்பதற்கும் சிங்கள படையினருக்கு நவீன படைத்துறைப் பயிற்சிகளை வழங்குவதை எதிர்த்து என்றேனும் களத்தில் இறங்கியிருக்கின்றதா? இந்திய அரசு நவீன படைக்கலங்கள் சிங்களப்படைகளுக்கு கொடுத்து வருவதையும், கோடிக்கணக்கில் விரயம் செய்து ஆயுதங்கள் குவிக்கப்படுவதையும் 30000 படைவீரர்களை மீட்க நமது கடற்பரப்புக்குள் இந்திய அரசு படையனுப்புவதை குறித்து மூச்சு விட்டுள்ளதா? 87 இல் காட்டிய வேகம் இன்று எங்கு போயிற்று? ஆக ஜ.வி.பெரமுனவின் அரசியலானது சிறிலங்க அரசுக்கு எதிரான தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் போக்கைப்பொறுத்து ஏற்ற இறக்கம் கொள்கின்றதே அன்றி, முரணற்ற அரசியல் கொள்கையை அது கொண்டிருக்கவில்லை. எனவே இக்கட்சி இதே போக்கில் வெகுவிரைவில் சிங்கள சோவினிசத்தின் தலைமைப்பொறுப்பை ஏற்கும் காலம் நெருங்குகிறது என நாம் கொள்ளலாம். தமிழ், முஸ்லீம் கட்சிகளின் தயவு அவசியமில்லை. அப்படியொரு நிலை ஏற்பட்டால் சந்திரிகா அரசாங்கத்தைப் பலப்படுத்த தான் தயாராக இருப்பதாக எவ்வளவு தீர்க்கதரிசனமாக இக்கட்சி அறிக்கை விட்டது.

## மக்கள் களம்

**அன்புடையீர்,**

தமிழீழம் பத்தொன்பதாம் இதழ் கிடைத்தது. நன்றி. முதல் பக்கத்திலேயே மூதூர்ச்சம்பவம் பற்றிய செய்தி இருந்தது. உண்மையில் அது பைத்துல்லாஹ் என்ற நபர் மீதானபழிவாங்கல் மாத்திரமல்ல. நீண்ட நாட்களாக மறைமுகமாக உறங்கிக் கிடந்த மூதூர் முஸ்லிம்கள் மீதான ஒரு பழிவாங்கலுமாகவே பலராலும் கொள்ளப்படுகின்றது. மூதூரில் எப்போதும் ஒரு சுமுக நிலை இருந்ததில்லை. விடுதலைப் புலிகள் அங்குள்ள அப்பாவி முஸ்லிம் தொழிலாளர்கள் (மீனவர்கள், விவசாயிகள்) மீது தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தி வருகின்றனர். மாதாந்தக் கொடுப்பனவுகளுக்காக அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். கடற்படையினரால் மீன்பிடி எல்லைகள் மட்டுப்படுத்தப்பட்டு தொழிலுக்கு அல்லாடும் மீனவர்களைக் கடத்தி அவர்களிடம் பணம் அறவிட்டு வருவது அவர்களின் மாதாந்த நடவடிக்கையாக இன்றுமிருக்கிறது. போதாததற்கு அண்மையில் எலும்பும் தோலுமாக இருக்கிற அவர்களைக் கடத்தி பலவந்தமாக இரத்தமும் பெற்றிருக்கிறார்கள்.

இராணுவம் பொதுமக்கள் வாழ்கின்ற இடங்களில் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்துகிறது என நாம் எல்லாருமாகவே குறைபடுவதுண்டு. இது போலத்தான் புலிகளும் சில நேரங்களில் சில இடங்களில் தாக்குதல் நடத்துகிறார்கள். குறிப்பாகச் சொல்வதானால் மூதூரையே எடுத்துக் கொள்ளலாம். அங்குள்ள தொலைக் கோபுரத்தைத் தாக்க வேண்டுமென்பது புலிகளின் பலநாள் முயற்சி. அது அவ்வப்போது தோல்வியில் முடிந்திருக்கிறது. சிலவேளைகளில் அவர்கள் ஷெல்லடிப்பதுமுண்டு. அது மக்கள் வாழிடங்களிலேயே விழுந்து பலரைக் காயப்படுத்தியிருக்கிறது. இவ்வாறான தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும். ஒரு கல்லில் இரண்டு மாங்காய் விழுத்தாட்டுவது என்ற கணக்கில்தான் மூதூரில் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இவ்வாறான சூழல் முஸ்லிம்களிடையே பலத்த அவநம்பிக்கைகளையும், சோர்வுகளையுமே ஏற்படுத்தி வந்திருக்கிறது. இந்த அழுத்தங்கள் முஸ்லிம்களை வேறு பக்கங்களுக்கும் திசை திருப்பியிருக்கின்றன.

ஊருக்குள் தொழிலுக்காக வரும் அப்பாவித் தமிழர்கள் பலர் முஸ்லிம் தரப்பினரால் அநியாயமாகக் கொல்லப்படுவதற்கும் இந்த ஒரு நிலையே காரணம். மக்கள் எப்போதும் சந்தேகங்களுடன் வாழ முடியாது. திறந்த மனதும் புரிந்துணர்வும் வேண்டும். இவற்றைத் தமிழ்த்தரப்பினர் தான் குறிப்பாக புலிகள் தான் செய்ய வேண்டும். தொடங்கி வைத்தவர்கள் முடித்து வைப்பதுதான் பிரச்சினைகளின் தீர்வுக்கான வழி.

ஆனால் இது வரை நம்பிக்கை தரும் விதத்தில் அவர்களிடமிருந்து எந்த சமிக்ஞையோ, நேரடி அறிக்கைகளோ வராதது கவலைக்குரியது மட்டுமல்ல. இரண்டு சமூகங்களின் அல்லது சொல்லப்படுவது போலான இரண்டு தேசங்களின் ஒற்றுமைக்கும், உறவுக்கும் பாதகமானது. பேச்சுவார்த்தைக்கான அக்கறைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் இத்தருணங்கள் தான் தமிழ்-முஸ்லிம் மீள் உறவுக்கான அடித்தளமாகவும் கொள்ளப்பட வேண்டும். ஏதாவது நல்லது நடக்குமென்றுஎதிர்பார்க்கலாமா அல்லது வருடங்களை கணக்கிட்டுக் கொண்டே போகலாமா என்பது புலிகளின் கைகளில்தான் இருக்கிறது.

-உமர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழம்

'The Editor'
BM Box 4002
London. WC IN 3XX
United Kingdom

## இலட்சியப் பயணத்தில் இன்னுமொரு மைல்கல்!

www.thamileelam.org
info@thamileelam.org

**50** ஆண்டுகாலமாக நமது விடுதலைக்காக பல்வேறு வழிகளிலும் போராடி வந்துள்ள நம் தேசம், அண்மைக்காலங்களில் ஆயுதப் போராட்டத்தில் விடுதலைப்புலிகள் பெற்ற பெரும் வெற்றிகளின் மூலமாக நமது போராட்ட வரலாற்றில் ஒரு புதிய அரசியல் கட்டத்திற்குள் காலடி வைத்துள்ளது.

கடந்துபோகும் இந்த வருடம் நமது தேசத்தின் போராட்ட வரலாற்றில் வெகு முக்கியத்துவ முடையதாகும். சிங்கள இனவெறி அரசை நாம் இராணுவ அர்த்தத்தில் வெற்றிகொண்ட வருடமாக இவ்வருடமுள்ளது. அது மாத்திரமல்ல, ஒருசேர சர்வதேச ஆதிக்க சக்திகள் நமது விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக வெளிப்படையாக அணிதிரண்டிருப்பதை நாம் நேரடியாக எதிர்கொள்ள வேண்டியேற்பட்டதும் இவ்வருடத்திலாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டமானது இன்று சர்வதேச முக்கியத்துவ- மிக்கஅரசியல் விவகாரமாக பரிணமித்துவிட்டது. இதன்வழியாக, நாம், உலகையே தனது ஆதிக்க கால்களுக்குக் கீழ் கொண்டுவரத் முயற்சித்து வரும் அமெரிக்க, பிரித்தானிய ஏகாதிபத்தியங்களின் நலன்களை எதிர்த்தும், பிராந்திய ஆதிக்க சக்தியான இந்திய அரசிடமிருந்தும் நமது தேசிய இறைமையை பாதுகாத்து வலிமையுடன் நிலைநாட்டிட வேண்டிய கட்டத்திலிருக்கிறோம்.

கடந்த காலங்களில் சமாதான வழிமுறைகளில் தீர்வு காண பல தடவை நம் தேசம் முன்வந்துள்ளது. ஒவ்வொரு தடவையும் நாம் ஏமாற்றப்பட்டோம். இருந்தும் நமது தலைமீது பழிபோட்டு சிங்கள ஆட்சியாளர்கள் தப்பித்துக்கொண்டனர். இப்போதும் சமாதானக் கரங்களை நம் தேசம் நீட்டுகின்றது. இதனையும் பலவீனத்தின் விளைவு என சிங்கள அரசு முட்டாள்தனமாக கருதும் எனின் அதற்கான விலையையும் பொறுப்பையும் சிங்கள அரசும் சிங்கள தேசமும் ஏற்க வேண்டியிருக்கும். இம்முறை தோல்வியுறப்போவது நாமல்ல அவர்களே.

நமது மக்களின் அரசியல் அபிலாஷைகள் முழு அளவில் பூர்த்திசெய்யப்படு- வது தமிழீழக் குடியரசில் மாத்திரம்தான் என்பதில் நம்மில் எவருக்கும் மாறுபட்டக் கருத்துகள் கிடையாது. இத்திசையில் நாம் இன்னும் பெரும் பணிகளை ஆற்ற வேண்டியவர்களாய் உள்ளோம். அதில் இப்பேச்சுவார்த்தை என்பது நமது போராட்டத்தின் ஒரு குறிப்பிட்ட கட்ட அரசியல் நிகழ்வு மாத்திரமே. இதில் பங்கேற்பதன் மூலம், நமது அரசியல் நியாயத்தை சர்வதேச அளவில் மேலும் பலப்படுத்துவோம். எமது போராட்டமானது, விடுதலைக்காகப் போரிடும் மக்களது நியாயமானப் போராட்டம் என்பதை உலகுக்கு எடுத்துரைப்போம்.

நமது தேசத்தின் நீண்டகால ஆயுதப் போராட்டத்தினால் அடையப்பட்டிருக்- கும் இந்த வெற்றிகரமான அரசியல் சூழ்நிலையை மேலும் அரசியல், இராணுவ வெற்றிகளை ஈட்டிக்கொள்ள மிகவாய்ப்பான சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்வோம். இவ்வாறான பல சாதகங்கள் ஒருங்கே அமையும் வரலாற்றுச் சந்தர்ப்பங்கள் கிடைப்பது அபூர்வம். அதனை சரியாகப் பயன்படுத்தி எமது தேசத்தின் விடுதலையை அண்மிக்கச் செய்வோம்! இதன் மூலம் தமிழீழ குடியரசை அமைப்பதை நோக்கிய நமது முன்னேற்றப்படிகளை ஒன்றன்பின் ஒன்றாக உறுதிப்படுத்திக் கொள்வோம். மேற்படி பொறுப்பான பணியை நிறைவேற்றவும், நிறைவேற்றுவதற்கான சூழலை உருவாக்கவும் நாம் அனைவரும் ஓரணி திரண்டு பாடுபடுவோம்.

சிறிலங்கா அரசானது, "தேசியப் பிரச்சனை" என்பதை முடிந்தவரையில் ஈழத்தமிழருடன் மாத்திரம் மட்டுப்படுத்திவிட முனைகிறது. சிங்கள அரசானது முஸ்லிம் மற்றும் மலையக தமிழ் தேசங்களையும் அடக்கி வருகிறது என்பதை நாம் இப்பேச்சுவார்த்தை அரங்கிற்கு கொண்டு வருவோம். முஸ்லிம்தேசம் மற்றும் மலையக தமிழ் தேசத்தின் அரசியல் உரிமைகளை பறித்தெடுக்க முயலும் சிங்கள அரசின் அனைத்து முயற்சிகளையும் நாம் நிராகரிப்போம். இம்மக்களும் இப்பேச்சுவார்த்தைகளில் சமத்துவமாக பங்கேற்பதை உறுதிப்படுத்துவோம்.

அரசியல் பேச்சுவார்த்தைக்கான இந்த அரங்கில் ஈழத்தமிழரின் இறைமையை உறுதியாக நிலைநாட்டுவது நமது தேசத்தின் பிரதிநிதியாக பங்கேற்கும் விடுதலைப் புலிகளின் கடமையாகும். இப்பெரும் பொறுப்பை நம் தேசம் அவர்களிடம் வழங்கியுள்ளது.

வட அமெரிக்கத் தொடர்புகட்கு:
300 Borough Dr.,
PO Box 47032
Scarborough,On.
M1P 4ZP
Canada

ஐரோப்பியத் தொடர்புகட்கு:
'The Editor'
BM BOX 6769
LONDON
WCI 3XX, U.K.
Tel: 07041372064

## ஆயரின் அமைதி முன்னெடுப்பு!

**யாழ்** ஆயரின் அரசியல் சமாதான முயற்சி, நெஞ்சு பூரிக்கும் அர்த்தமுள்ள அளப்பெரும் பணி. நம் தேசத்தின் பெருமையை நிலைநாட்டும் திடமான முன்னெடுப்பு. இப்படிப்பட்ட பொது மனிதர்களின் அயரா உழைப்பு இன்றைய கட்டத்தில் நம் தேசத்திற்கு அவசர அவசியமாகும். விகாரமாதேவி பூங்காவில் சமாதான பதாகைகள் சிங்கள வெறியர்களால், அரச படைகளின் அதிஉயர் பாதுகாப்புகளுக்கும் மத்தியில் எரியூட்டப்படுவது ஒரு புறம் தொடர்ந்தாலும், உண்மையான சமாதானம் நோக்கிய நம்தேசத்தின் உன்னத பயணம் தங்குதடையின்றித் தொடரும். மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும், யாழ்ப்பாணத்திலும் இருந்து நமது மக்கள் திரண்டு தமது சமாதானக்கரங்களை நீட்டியுள்ளனர். நமது நிலைப்பாட்டில் நாம் உறுதியாக நிற்போம். ஆதிக்க சக்திகளின் பதில்கள் என்னவென்று பார்ப்போம்.

ஆயர் மலையக தமிழ் மக்களையும் சந்திக்கப் புறப்பட்டுள்ளார். இந்த முயற்சியை நாம் அனைவரும் வரவேற்றுப் பலப்படுத்துவோம். அன்று மலையக மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதிராக செயற்பட்ட நம் தேசத் தலைமையின் வரலாற்று ரீதியான தவறுக்கு இன்றைய சந்ததி நிச்சயம் பிராயச்சித்தம் ஆற்றியே தீரும். சிறிலங்கா அரசினாலும், சிங்கள இனவாதத்தினாலும் மிக மோசமாக அடக்கப்பட்டு வரும் சக சமூகங்கள் பரஸ்பரம் நமக்கிடையில் நல்லெண்ணத்தை உருவாக்கிநம்பிக்கையை கட்டியெழுப்புவோம். எழுச்சியுற்றுள்ள மலையக தமிழ் தேசத்தின் அரசியல் உரிமைகளை சமத்துவமாக ஏற்றுக்கொள்வதுடன் அவர்களுக்காக அரசியல் பேச்சுவார்த்தை அரங்கில் விடாப்பிடியாக குரல் கொடுப்போம்.

அதேசமயம், பொதுவான தாயகத்தில் பின்னிப்பிணைந்து வாழும் முஸ்லீம் தேசத்தின் பால் நமது தேசம் ஆற்ற வேண்டிய கடமைகளையும் தவறாது ஆற்றுவோம். அதுமட்டுமல்ல, பல தசாப்தங்களுக்கு முன்பு நமது தாயகத்திற்கு வாழ்வு தேடி வந்து தமிழீழத்தின் பிரஜைகளாக வேண்டிய சிங்கள மக்களுடனும் நமது உரையாடலை தொடங்குவோம். அனைத்து உத்தரவாதங்களையும் வழங்குவோம். நமது சமாதான மொழியை அம்மக்கள் நிச்சயம் புரிந்து கொள்வர்.

அனைவருக்கும் அரசியல் சமத்துவம் என்ற உயர்ந்த விழுமியங்களை நாம் உயர்த்திப்பிடிப்போம். சிங்கள ஆளுங்குழுமத்திற்கு மட்டுமல்ல, உலக மற்றும் பிராந்திய ஆதிக்க சக்திகளுக்கும் மெய்யான அரசியல் விழுமியங்கள் என்னவென்பதைக் கற்றுத்தருவோம். நமது தேசத்தின் பரந்த மனப்பாங்கை நிரூபணம் செய்வோம். எதிரிகள் தரப்பு அனைத்திலும் அசமத்துவம் நோக்கி அணிச்சேர்க்கைகளை செய்து கொள்ளட்டும். நாம் அனைத்திலும் சமத்துவம் படைக்கும் உன்னத விழுமியம் படைப்போம். ஈற்றில் உலகின் மனசாட்சி நம்மையும் நமது போராட்டத்தின் தார்ப்பிரியத்தையும் நிச்சயம் புரிந்து கொள்ளும். அப்போது ஒன்றிணைந்த சர்வதேச சமூகம் நம்மை ஆதரித்து ஏற்றுக் கொள்ளும். நம்பிக்கையுடன் நடைபோடுவோம். ஆயரைப்போன்ற இன்னும் ஆயிரம் பொதுமனிதர்கள் நம் தேசத்தில் இருந்து புறப்படட்டும். அடக்கப்படும் தேசங்கள் பரஸ்பரம் தமக்கிடையில் நல்லெண்ணங்களை உருவாக்கிப் பலப்படுத்தட்டும்.

## இந்திய மண்ணில் தமிழீழப் பெண்களின் நிலை

தமிழீழத்திலிருந்து, அகதிகளாக தமிழகத்தில் தஞ்சமடைந்திருக்கும் பெண்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் அதிகரித்த வண்ணமுள்ளன. சில மாதங்களுக்கு முன்னர் தமிழீழத்திலிருந்து அகதியாக சென்ற பெண்ணை கடலில் வைத்தே கடத்தி வன்புணர்ச்சிக்கு உட்படுத்தி படுகொலைசெய்தனர். தற்பொழுது, தமிழக அகதிமுகாமொன்றிலிருந்த 13 வயது பாடசாலைச் சிறுமி ஒருவர் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நமது சொந்த மண்ணிலேயே நம்மை துன்புறுத்தி, நமது சகோதரிகளை குரூரமாக சிதைத்து படுகொலை செய்த தனது படையினரின் குற்றங்களை கண்டுகொள்ளாததுடன், அவர்களை கௌரவித்து வரவேற்ற இந்திய அரசு, தனது நாட்டில் அகதிகளாக தஞ்சமடைந்திருக்கும் நமது பெண்களுக்கு பாதுகாப்பு வழங்குமென நாம் எப்படி எதிர்பார்த்திட முடியும்? இந்த மத்திய அரசுக்கு விசுவாசமாக செயற்பட்டுவரும் தமிழக அரசு நமது பெண்களுக்காகவா குரல்கொடுக்க போகிறது?

தமிழகத்தில் அகதிகளாக தஞ்சமடைவதென்பது, மனிதருக்குரிய அனைத்து கௌரவங்களையும் நம்மை ஆக்கிரமிக்க துடித்துக்கொண்டிருக்கும் இந்திய அரசின் காலடியில் வைத்துவிட்டு நடமாடும் பிணங்களாக வாழ்வதற்கான பிச்சையை மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கு சமனாகும். வேண்டாம் தோழியரே நமக்கிந்த அவல வாழ்வு. நமது சொந்த மண்ணில், நமக்கான அரசை உருவாக்குவோம். நமது உடல் யாராலும் அத்துமீறப்படாத சூழலை நமது தமிழீழ மண்ணில் உறுதிப்படுத்துவோம். இதுதான் நமக்கான ஒரே தீர்வாயுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்